**பிப்ரவரி – 09**

# TNPSC துளிகள்

- அகில இந்திய வானொலியில் (AIR) இந்தியா சுதந்திரம் பெற்றதனைத் தமிழர்களுக்கு அறிவித்த, 102 வயதான செய்தி வாசிப்பாளர் R.S.வெங்கட்ராமன் காலமானார்.
- திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கங்கைகொண்டான் SIPCOT தொழில்துறைப் பூங்காவில் TP சோலார் லிமிடெட் நிறுவனத்தினால் அமைக்கப்பட்டுள்ள நாட்டின் ஒரே தொகுதியில் அமைந்த 4.3 GW சூரிய மின்கலம் மற்றும் உற்பத்தி ஆலையினை தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- குஜராத் மாநில அரசானது, மதிப்பீட்டினை மேற்கொண்டு மாநிலத்திற்கான பொது உரிமையியல் சட்ட (UCC) வரைவினை உருவாக்குவதற்காக ஓர் உயர் மட்டக் குழுவை அமைப்பதாக அறிவித்துள்ளது.
- இந்திய நாடானது, தொற்று மற்றும் தொற்றாத நோய்களை ஆராய்ச்சி செய்வதற்காக ஃபரிதாபாத்தில் (அரியானா) உள்ள மருத்துவத் தகவல் பரிமாற்றம் சார்ந்த சுகாதார அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தில் (THSTI) மர நாய்களை ஒரு விலங்கு சோதனை மாதிரியாகப் பயன்படுத்தும் தனது முதல் ஆராய்ச்சி மையத்தினைத் தொடங்கியுள்ளது.
- உலக சுகாதார அமைப்பு மற்றும் பிற பங்குதாரர் நாடுகள் உகாண்டாவில் எபோலா பாதிப்பிற்கு எதிரான தடுப்பூசிக்கான முதல் மருத்துவச் செயல்திறன் சோதனையைத் தொடங்கியுள்ளன.
- 2025 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் வழக்கமான நிதிநிலை மீதான ஒதுக்கீட்டிற்கு இந்தியா 37.64 மில்லியன் அமெரிக்க டாலர்களை செலுத்தியுள்ளதுடன், ஐக்கிய நாடுகள் சபைக்கு தங்கள் வழக்கமான நிதி ஒதுக்கீடுகளை முழுமையாகவும் சரியான நேரத்திலும் செலுத்திய 35 உறுப்பினர் நாடுகளின் "மதிப்புமிக்க பட்டியலில்" இந்தியா இணைகிறது.
- அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக, அர்ஜென்டினாவும் உலக சுகாதார அமைப்பில் இருந்து (WHO) விலகுவதாக அறிவித்துள்ளது.
- சீனாவின் டியாங்காங் விண்வெளி நிலையத்தில் உள்ள விண்வெளி வீரர்கள் செயற்கை ஒளிச்சேர்க்கையைப் பயன்படுத்தி, ஆக்ஸிஜன் மற்றும் விண்வெளி ஏவுகல எரிபொருளை வெற்றிகரமாக உற்பத்தி செய்துள்ளனர்.
- மக்கள் ஒற்றுமையுடன் வாழ்வதற்காக ஒன்றிணைவதன் பெரு மதிப்பையும், பல்வேறு வகைகளிலான ஒற்றுமையின் பெரு முக்கியத்துவத்தையும் கௌரவிக்கும் வகையில் ஆண்டுதோறும் பிப்ரவரி 04 ஆம் தேதியன்று சர்வதேச மனித சகோதரத்துவ தினம் அனுசரிக்கப்படுகிறது.

# தேசியச் செய்திகள்

## 'ஞான் பாரதம் திட்டம்' 2025


- 2025 ஆம் ஆண்டு மத்திய நிதிநிலை அறிக்கையில் தேசியக் கையெழுத்துப் பிரதி திட்டத்தின் (NMM) கீழ் 'ஞான் பாரதம் திட்டம்' சேர்க்கப்பட்டுள்ளது.
- இது இந்தியாவின் கையெழுத்துப் பிரதிகளின் மரபு குறித்த கணக்கெடுப்பு/ஆய்வு, ஆவணப்படுத்தல் மற்றும் பாதுகாப்பிற்கான ஒரு சிறப்புத் திட்டமாகும்.
- 'ஞான் பாரதம் திட்டம்' ஆனது கல்வி நிறுவனங்கள், அருங்காட்சியகங்கள், நூலகங்கள்

மற்றும் தனியார் சேகரிப்பாளர்களிடம் உள்ள இந்தியாவின் கையெழுத்துப் பிரதி மரபுகளின் "கணக்கெடுப்பு, ஆவணப்படுத்தல் மற்றும் பாதுகாப்பை" மேற்கொள்ளச் செய்வதற்கான ஒரு திட்டமாகும்.

- தற்போது, NMM ஆனது இந்திரா காந்தி தேசியக் கலை மையத்தின் ஒரு பகுதியாக உள்ளது.
- NMM ஆனது 2003 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.




## பாரதிய பாஷா புஸ்தக் திட்டம்








- 2025 ஆம் ஆண்டு மத்திய நிதிநிலை அறிக்கையானது பாரதிய பாஷா புஸ்தக் என்ற ஒரு திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.
- இது பள்ளி மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்கு இந்திய மொழிகளில் எண்ணிம வழியிலான புத்தகங்களை வழங்குவதற்கான ஒரு புதிய முன்னெடுப்பாகும்.
- இந்தத் திட்டம் ஆனது, பிராந்திய மொழிகளில் நூல்களை வழங்குவதன் மூலம் கல்வி கற்றலை மேலும் அணுகக் கூடியதாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தத் திட்டத்தின் கீழ், பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் உள்ள மாணவர்கள் எண்ணிம வடிவங்களில் பாடப்புத்தகங்கள் மற்றும் கற்றல் சார் மீதான மூலங்களை அணுகலாம்.
- மொழியியல் பன்முகத் தன்மையை நன்கு ஊக்குவிக்கும் அதே வேளையில், கல்வியில் தொழில்நுட்பத்தினை ஒருங்கிணைக்கச் செய்வதற்கான அரசின் ஒரு உந்துதலுடன் இந்த நடவடிக்கையும் ஒத்துப் போகிறது.

## தேசிய உற்பத்தித் திட்டம் 2025




- மத்திய அரசானது, தூய்மையான தொழில்நுட்ப உற்பத்தியில் கவனம் செலுத்தும் வகையில், குறு, நடுத்தர மற்றும் பெரிய தொழில்துறைகளுக்கான ஒரு திட்டத்தினை உருவாக்க உள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், வணிகம் செய்வதை மிக எளிதாக்குதல் மற்றும் செலவினம், தேவைக்கேற்ற வேலைவாய்ப்புகளுக்கானத் திறன்களை மேம்படுத்துதல், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள், தொழில்நுட்பங்கள் கிடைக்கப்பெறும் தன்மை மற்றும் தரமானப் பொருட்கள் ஆகிய ஐந்து பகுதிகள் மீது மிக அதிக கவனம் செலுத்தப் படும்.
- இது மத்திய அமைச்சகங்கள் மற்றும் மாநிலங்களுக்கு கொள்கை ஆதரவு, அமலாக்க செயல் திட்டங்கள், நிர்வாகம் மற்றும் கண்காணிப்புக் கட்டமைப்பினை வழங்கும்.
- இந்தத் திட்டம் ஆனது தோல் பொருட்களுக்கான ஆதரவைத் தவிர, தோல் பொருட்கள் சாராத தரம் வாய்ந்த காலணிகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான முக்கிய வடிவமைப்பு திறன், கூறுகளின் உற்பத்தி மற்றும் இயந்திரங்களுக்கான ஆதரவினை அளிக்கும்.

- இது, உயர்தரமான, தனித்துவமான, புதுமையான மற்றும் நிலையான நுட்பம் மூலமாக பொம்மைகளை உருவாக்கும் உற்பத்தி சூழல் அமைப்பை உருவாக்குவதிலும் கவனம் செலுத்தும்.
- இந்தியா தனது மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மதிப்பில் தற்போது 17 சதவீதமாக உள்ள உற்பத்தித் துறையின் மீதான பங்கை 25 சதவீதமாக உயர்த்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

## SWAMIH நிதி 2.0





- மத்திய நிதிநிலை அறிக்கையில், நடுத்தர வர்க்கத்தினருக்கு மலிவான வீட்டு வசதி வழங்கும் சிறப்பு திட்ட நிதியின் (SWAMIH) கீழான இரண்டாவது தவணையாக 15,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இது ஒரு லட்சம் குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்வதற்கு என்று உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- SWAMIH நிதியானது, நிதி அமைச்சகத்திடமிருந்து நிதியினைப் பெறுகிறது.
- இது நிதி நெருக்கடியில் உள்ள மற்றும் மிகவும் முன்னதாக மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் பட்ட குடியிருப்புச் சொத்துகளுக்கான கடன் நிதியளிப்பிற்காக என்று உருவாக்கப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட SWAMIH நிதியானது, ஸ்டேட் வங்கி குழுமத்தின் நிறுவனமான SBICAP வென்ச்சர்ஸ் லிமிடெட் மூலம் நிர்வகிக்கப்படுகிறது.
- SWAMIH நிதியின் முதல் தவணையின் கீழ், இது வரையில் சுமார் 15,500 கோடி ரூபாய் திரட்டப் பட்டுள்ளது.
- மிக மலிவான, நடுத்தர வர்க்கத்தினருக்கான வீட்டு வசதிப் பிரிவுகளில் உள்ளடங்கும் வகையில் நிறுத்தி வைக்கப்பட்ட மற்றும் வீட்டு மனை விற்பனை ஒழுங்குமுறை ஆணையத்தினால் (RERA) பதிவு செய்யப்பட்ட குடியிருப்புத் திட்டங்களின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்வதற்காக இந்த நிதியின் கீழ் முன்னுரிமை கடன் வழங்கப் படும்.

- இந்த நிதியைப் பெறுவதற்கு, அவற்றின் நிகரச் சொத்து மதிப்பு கடன் மதிப்பினை விட அதிகமாக இருக்க வேண்டும் மற்றும் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்வதை உறுதி செய்ய கடைசி கட்ட நிதிக்கு மட்டும் தேவை இருக்க வேண்டும்.

# சர்வதேசச் செய்திகள்

## கினியா – உறக்க நோய்

- கினியா நாடானது உறக்க நோய் என்று வெகுவாக அழைக்கப்படும் மனித ஆப்பிரிக்க டிரிபனோசோமியாசிஸின் (HAT) கேம்பியன் ஒட்டுண்ணி வழியான பாதிப்பினை ஒரு பொது சுகாதாரப் பிரச்சினை என்ற நிலையில் இருந்து வெற்றிகரமாக நீக்கியுள்ளது.
- கினியாவில் நிலவி வந்த மனித ஆப்பிரிக்க டிரிபனோசோமியாசிஸ் பாதிப்பின் இந்த ஒரே வடிவம் ஆனது, அந்த நாட்டிலிருந்து ஒழிக்கப்பட்ட முதல் புறக்கணிக்கப்பட்ட வெப்ப மண்டல நோயாக மாறியுள்ளது.
- HAT என்பது பாதிக்கப்பட்ட குருதி உறிஞ்சும் ஈக்கள் கடித்தால் பரவும் ஓர் ஒட்டுண்ணி நோயாகும்.
- கினியாவின் இந்த சாதனையானது, டோகோ, பெனின், கோட் டி'ஐவோயர், உகாண்டா, ஈக்குவடோரியல் கினியா, கானா மற்றும் சாட் ஆகிய ஏழு நாடுகளில் இந்த பாதிப்பு ஒழிப்பிற்கான போக்கின் ஒரு பகுதியாக இடம் பெற்றுள்ளது.




# பொருளாதாரச் செய்திகள்

## ரெப்போ விகிதத்தினை 25 புள்ளிகள் குறைத்தல்

- இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழு (MPC) ஆனது, ரெப்போ வட்டில் விகிதத்தினை 25 புள்ளிகள் (bps) குறைத்து 6.25 சதவீதமாகக் குறைத்துள்ளது.
- சுமார் ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட முதல் ரெப்போ விகிதக் குறைப்பை இது குறிக்கிறது.


- நிலையான வைப்பு நிதி வசதி (SDF) விகிதம் ஆனது 6 சதவீதமாக நிர்ணயிக்கப் பட்டு உள்ளது.
- விளிம்பு நிலை வைப்பு நிதி வசதி (MSF) விகிதம் மற்றும் வங்கி விகிதம் ஆனது 6.50 சதவீதமாக உள்ளது.
- மத்திய வங்கியானது கடைசியாக 2020 ஆம் ஆண்டு மே மாதத்தில், ரெப்போ வட்டி விகிதங்களை 40 அடிப்படைப் புள்ளிகள் வரை குறைத்து 4 சதவீதமாக நிர்ணயித்தது.

**How RBI's 25-bps rate cut will reduce your interest burden**

Assumptions: Original tenure of the loan is 20 years (240 months); EMI amount remains unchanged; Original interest rate is 9% and revised is 8.75%

| Particulars | Rs 50 lakh home loan | Rs 75 lakh home loan | Rs 1 crore home loan |
|---|---|---|---|
| EMI | Rs 44,986 | Rs 67,480 | Rs 89,973 |
| Actual interest payout (rounded off) | Rs 57.96 lakh | Rs 86.95 lakh | Rs 1.15 crore |
| Total interest payout will drop to | Rs 53.6 lakh | Rs 80.4 lakh | Rs 1.07 crore |
| Total interest saved | Rs 4.36 lakh | Rs 6.55 lakh | Rs 8.73 lakh |
| Tenure will shrink by | 10 months | 10 months | 10 months |

## கிராமீன் கடன் மதிப்புக் குறியீடு





- கிராமீன் கடன் மதிப்பு என்பது சுய உதவிக் குழுக்களின் (SHGs) உறுப்பினர்கள் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள மக்களின் கடன் தேவைகளுக்காக உருவாக்கப்பட உள்ள ஒரு கட்டமைப்பாகும்.
- பொதுத்துறை வங்கிகள் ஆனது இந்த 'கிராமீன் கடன் மதிப்புக் குறியீடு' கட்டமைப்பை உருவாக்க உள்ளன.
- சுய உதவிக் குழுக்களில் பெண்கள் பெற்ற கடன் மதிப்பு அறிவிக்கப்பட்டால், அவர்கள் வங்கிகளிடமிருந்து அதிகக் கடன்களை எளிதாகப் பெற முடியும்.
- கிராமப்புறங்களில் கடன் வாங்குபவர்கள் குறித்த மிகவும் துல்லியமான மதிப்பீட்டை

வழங்குவதன் மூலம் கடன்களைத் திருப்பிச் செலுத்தும் ஒரு நெறியை மேம்படுத்தச் செய்வதையும் மோசடியைக் குறைப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது சிறு கடன்களை வலுப்படுத்தும், நிதி உள்ளடக்கத்தினை அதிகரிக்கும் மற்றும் வேளாண்மை, கிராமப்புற மேம்பாடு மற்றும் MSME நிறுவனங்கள் போன்றப் பல்வேறு துறைகளுக்கு ஆதரவளிக்கும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## வெண்பிடரி பட்டாணிக் குருவி




- வடக்கு கர்நாடகாவின் கப்படகுடா மலைக்குன்றுகளில் உள்ள கடகோலா கிராமத்தில் முதன்முறையாக வெண்பிடரி பட்டாணிக்குருவி தென்பட்டுள்ளது.
- இது பரிடே என்ற பட்டாணிக் குருவி குடும்பத்தினைச் சேர்ந்த ஒரு மரக்கிளைகளில் அமர்வதற்கு ஏற்ற கால் வடிவமைப்புகளைக் கொண்ட (பாசரின்) பறவையினமாகும்.
- இந்தியாவில் மட்டுமே காணப்படும் இப்பறவையானது, மேற்கு இந்தியா மற்றும் தென் இந்தியாவில் இரண்டு தனித்தனி குழுக்களாக மிக வறண்ட முட்கள் நிறைந்த புதர் காடுகளில் காணப்படுகிறது.
- ஆங்காங்கே மட்டுமே காணப்படும் இந்த இனம் ஆனது அருகும் அபாயத்தில் உள்ளது.
- இந்தியாவில், இந்தப் பறவை இராஜஸ்தான், குஜராத், தெற்கு ஆந்திரப் பிரதேசத்தின் கிழக்குத் தொடர்ச்சி மலைகள், வடக்கு தமிழ்நாடு, ஹரியானா மாநிலம் மற்றும் தெற்கு கர்நாடகாவின் சில பகுதிகளில் மட்டுமே காணப்படுகிறது.
- தெற்கு கர்நாடகாவில், இது காவேரி வனவிலங்குச் சரணாலயத்தில் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## தீஸ்தா-3 அணை புனரமைப்பு

- சிக்கிமில் உள்ள டீஸ்டா-3 நீர்மின் நிலையத்தினை புனரமைப்பதற்காக சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் நிபுணர் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- முதலில் அமைக்கப்பட்ட 1,200 மெகாவாட் திறன் கொண்ட தீஸ்தா-III சுங்தாங் நீர்மின்

உற்பத்தி அணை ஆனது 2023 ஆம் ஆண்டு அக்டோபர் 03 மற்றும் 04 ஆம் தேதிகளில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் அழிக்கப்பட்டது.

- தெற்கு லோனாக் ஏரியிலிருந்து உருவாகிய பனிப்பாறை ஏரி உடைப்பினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் (GLOF) தூண்டப்பட்ட வெள்ளம் ஆனது, கற்காரைகளால் ஆன 60 மீட்டர் உயர அணையை அடித்துச் சென்றது.
- புதிய கட்டமைப்பானது 118.64 மீட்டர் உயர கற்காரைகளால் ஆன ஈர்ப்பு விசை சார்ந்த அணையாக புனரமைக்கப்படும்.




## முக்கிய தினங்கள்

### சர்வதேச பெண் பிறப்புறுப்பு சிதைப்பு எதிர்ப்பு தினம் - பிப்ரவரி 06




- பெண் பிறப்புறுப்பு சிதைப்பு (FGM) என்பது மருத்துவச் சிக்கல்கள் எதுவும் சாராத காரணங்களுக்காக பெண் பிறப்புறுப்பினை மாற்றியமைப்பது அல்லது சிதைப்பது உள்ளிட்ட அனைத்து நடைமுறைகளையும் உள்ளடக்கியது.
- இது சர்வதேச அளவில் சிறுமிகள் மற்றும் பெண்களின் மனித உரிமைகள், சுகாதாரம் மற்றும் கண்ணியத்தை மீறுவதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- 2012 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஆனது இந்த சர்வதேச தினத்தினை நியமித்தது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு: “Step up the Pace” என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## INCOIS மையத்தின் 26வது ஸ்தாபன தினம்

- இந்தியத் தேசியக் கடல் சார் தகவல் சேவை மையம் (INCOIS) ஆனது 1999 ஆம் ஆண்டில் தெலுங்கானாவின் ஐதராபாத் நகரில் நிறுவப்பட்டது.
- இது புவி அறிவியல் துறை அமைச்சகத்தின் (MoES) கீழ் செயல்படும் ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.
- இது இந்தியா மற்றும் 28 இந்தியப் பெருங்கடல் நாடுகளுக்கு, 10 நிமிடங்களுக்குள் சுனாமி எச்சரிக்கைகளை வழங்கச் செய்கின்ற இந்திய சுனாமி முன் எச்சரிக்கை மையத்தினை (ITEWC) நிறுவியது.
- இது யுனெஸ்கோ அமைப்பினால் சிறந்த சுனாமி முன்னெச்சரிக்கை சேவை வழங்கும் அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- கடலில் தொலைந்து போன தனிநபர்கள் அல்லது பொருட்களைக் கண்டுபிடிப்பதில் உதவுவதற்காக INCOIS நிறுவனமானது தேடல் மற்றும் மீட்பு உதவிக் கருவியை (SARAT) உருவாக்கியுள்ளது.
- இந்தத் தின நிகழ்வின் போது INCOIS மையமானது, ஹில்சா மீன்வள ஆலோசனை (HiFA) வழங்கீட்டு சேவைகள் மற்றும் INCOIS உலகளாவியப் பெருங்கடல் மறு பகுப்பாய்வு (IGORA) பதிப்பு 1 ஆகிய இரண்டு புதியத் தயாரிப்புகளை அறிமுகப்படுத்தியது.




## கூடுதல் நீளம் கொண்ட தரமான இழை (ELS) கொண்ட பருத்தி

- 2025 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், "பருத்தி வேளாண்மையின் உற்பத்தித் திறன் மற்றும் அதற்கான நிலைத்தன்மையில் குறிப்பிடத் தக்க முன்னேற்றங்களை ஏற்படுத்துவதற்கும், கூடுதல் நீளம் கொண்ட தரமான இழை (ELS) கொண்ட (ELS) பருத்தி

வகைகளை ஊக்குவிப்பதற்குமான" ஐந்து ஆண்டு திட்டம் அறிவிக்கப்பட்டது.

- பருத்தியானது அதன் இழைகளின் நீளத்தின் அடிப்படையில் நீண்ட, நடுத்தர அல்லது குறுகிய இழையாக வகைப்படுத்தப்படுகிறது.
- இந்தியாவில் வளர்க்கப்படும் பருத்தி வகையில் தோராயமாக 96 சதவீதப் பங்கினைக் கொண்ட கோசிபியம் ஹிர்சுட்டம், நடுத்தர இழை வகையைச் சேர்ந்தது.
- அதன் இழை நீளம் 25 முதல் 28.6 மி.மீ வரை இருக்கும்.
- அதே சமயம், ELS வகைகள் ஆனது 30 மி.மீ மற்றும் அதற்கு மேற்பட்ட இழை நீளத்தைக் கொண்டுள்ளன.
- பெரும்பாலான ELS பருத்தி வகையானது, பொதுவாக எகிப்திய அல்லது பிமா பருத்தி என்று அழைக்கப்படும் கோசிபியம் பாரபடென்ஸ் இனத்திலிருந்து பெறப்படுகிறது.
- தென் அமெரிக்காவில் தோன்றிய ELS பருத்தி வகையானது, இன்று பிரதானமாக சீனா, எகிப்து, ஆஸ்திரேலியா மற்றும் பெரு ஆகிய நாடுகளில் வளர்க்கப்படுகிறது.
- இந்தியாவில், மகாராஷ்டிராவின் சாங்லி மாவட்டத்தில் உள்ள அட்பாடி தாலுக்காவின் மழைப்பொழிவு மிக்க பகுதிகளிலும், தமிழ்நாட்டில் கோயம்புத்தூரைச் சுற்றியும் சில ELS பருத்தி வகை வளர்க்கப்படுகின்றன.
- தற்போது, இந்தியாவில் ELS பருத்தி வகையின் ஒரு ஏக்கருக்கான மகசூல் அளவு மற்ற நாடுகளை விட கணிசமாகக் குறைவாக உள்ளது.
- உதாரணமாக, பிரேசில் ஒரு ஏக்கருக்கு சராசரியாக 20 குவிண்டால் மகசூல் கொண்டு உள்ள அதே நேரத்தில் சீனா 15 குவிண்டால் மகசூலைக் கொண்டுள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★